44—

படகு அணையும் தள விரிவாக்கம்

***7383—திருமதி பி. கீதா ஜீவன்**:

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி திரேஸ்புரம் கடற்கரையில் படகு அணையும் தளத்தை வடக்கு பகுதி வரை விரிவாக்கம் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தூத்துக்குடி மாவட்டம், திரேஸ்புரம் கடற்கரையில் படகு கட்டும் (அணையும்) தளத்தை வடக்குப் பகுதி வரை விரிவாக்கம் செய்திடும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி தொகுதியில் அமையப்பெற்றுள்ள திரேஸ்புரம் கடற்கரையில் படகுகளின் எண்ணிக்கை அதிகமாகி உள்ளது. அந்தப் பகுதியில் கடல் அரிப்பால் நீர் உட்புகுந்து வருகிறது. ஆகவே, வடக்குப் பகுதியில் படகு அணையும் தளத்தை விரிவாக்கம் செய்தால், நிச்சயமாக அதிக அளவிலான படகுகளை நிறுத்துவதற்கு வாய்ப்பாக அமைவதுடன், படகுகளுக்கும் பாதுகாப்பாக இருக்கும். எனவே, எப்படியாவது அதைச் செய்து தர வேண்டுமென்று மீண்டும் அரசை வலியுறுத்த விரும்புகிறேன்.*

முற்பகல் 10-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

2019 பிப்ரவரி 11]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், திரேஸ்புரம் கடற்கரைப் பகுதியில் 600 மீன் பிடிப் படகுகள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற நிலையில், மாண்புமிகு அம்மாவினுடைய அரசில் 2011-2012 ஆம் ஆண்டில் 7 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் 320 மீட்டருக்கு படகு அணையும் தளம் நீட்டிப்பு செய்யப்பட்டது. அதேபோல், அம்மாவினுடைய அரசில் 2013-2014 ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் ஊரக வளர்ச்சி மேம்பாட்டிற்கான கடனுதவி திட்டத்தின்கீழ் 6 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் 564 மீட்டர் தூரத்திற்கு நீட்டிப்பு செய்யப்பட்டது. மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கோரிக்கையினை வலியுறுத்திச் சொன்னதன் அடிப்படையில், 5 கோடியே 10 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் படகு அணையும் தள விரிவாக்கத் திட்டத்தினை, கடற்கரையின் வடக்குப் பகுதிக்கு விரிவாக்கம் செய்வதற்கு அரசு பரிசீலித்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி தொகுதியில் மட்டுமல்லாமல், தமிழகமெங்குமே, மீனவர்கள் மீனவர் சேமிப்பு நிவாரண நிதி செலுத்தி, அதற்கு ஈடாக, மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்போடு ரூ.4,500/- வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், 60 வயதானவர்களுக்கு அந்த நிதி வழங்கப்படுவதில்லை. ஆகவே, மீனவர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக இருக்கிற 60 வயது பூர்த்தியடைந்த மீனவர்கள் மற்றும் மீனவ மகளிருக்கு மாதாந்திர உதவித் தொகையாக ரூ.1,000/-ஐ வழங்கினால், நிச்சயமாக மீனவர்களின் நலனைக் காப்பதாக அமையும். ஆகவே, மீனவ நல வாரியம்மூலம் 60 வயது பூர்த்தியடைந்த மீனவர்கள் மற்றும் மீனவ மகளிருக்கும் ரூ.1,000/- வழங்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

அதேபோல, மீன் பிடி குறைவு காலத்திற்கு நிவாரண நிதியாக ஆண்களுக்கு ரூ.5,000/- வழங்குகிறீர்கள். அதேபோல் மீன் வியாபாரம் செய்யக்கூடிய மீனவ மகளிருக்கும் மீன் பிடி குறைவு காலத்திற்கு

நிவாரண நிதியை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அந்தக் காலகட்டத்தில் அவர்களுக்கும் sales *குறைவுதான். மீனவ மகளிரும் பாதிப்படைகிறார்கள். ஆகவே, மீனவ மகளிருக்கும் மீன் பிடி குறைவு காலத்திற்கான நிவாரண நிதியை வழங்க வேண்டுமென்று அரசை வலியுறுத்த விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீனவர்கள்மேல் அதிகமான அளவிற்கு அன்பு கொண்டதன் காரணமாகத்தான் எந்த ஓர் ஆட்சியிலும் இல்லாத வகையில் மீன் பிடி குறைவு காலத்திற்கும் நிவாரணமாக ரூ.5,000/- கொடுத்தார்கள். மீன் பிடி குறைவு காலத்திற்கு எந்த ஒரு மாநிலத்திலும் நிவாரணம் கொடுக்கப்படவில்லை. நம்முடைய மாநிலத்தில்தான் ரூ.5,000/- வழங்கப்படுகிறது. அந்தத் திட்டத்தையும் நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் கொண்டுவந்தார்கள். அதேபோல மீனவ மகளிர் சேமிப்பு நிவாரணத் திட்டம் (குறுக்கீடு) அதேபோல மீனவ மகளிர் சேமிப்பு நிவாரணத் திட்டம். . .*

(மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி அவர்கள் எழுந்து நின்று ஏதோ பேசினார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. சாமி, நான் அனுமதிக்காமல் நீங்களாகவே எழுந்து பேசக் கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, உங்கள் சௌகரியத்திற்கு கேள்வி கேட்பது என்றால் எப்படி? (குறுக்கீடுகள்) கேள்வி நேரத்தில் கேள்வி கேட்பதற்கு. . . (குறுக்கீடுகள்) இல்லை, அதெல்லாம் இல்லை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். நீங்கள் அதைக் கேளுங்கள். நான் உங்களுக்கு வாய்ப்புத் தரும்போது நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, உங்களுடைய பதிலை அப்படியெல்லாம் எடுத்துக்கொள்ள முடியாது. வாய்ப்பு இருந்தால் தருகிறேன். தகவல் இருந்தால் சொல்லுங்கள்; அப்போது கேளுங்கள்.*

2019 பிப்ரவரி 11]

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மானியக் கோரிக்கையின்மீது பேசும்போது கேளுங்கள், நான் பதில் சொல்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் நீங்கள் பதில் சொல்லி முடியுங்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன் பிடி குறைவு காலத்திற்கு நிவாரணமும், தேசிய மீனவர் சேமிப்பு நிவாரணமும், அதேபோன்று இந்தியாவிலேயே மீனவ மகளிருக்கு மீன் பிடி குறைவு காலத்திற்கு மீனவ மகளிர் சேமிப்பு நிவாரணத் திட்டத்தின்மூலம் ரூ.4,500/-ம் கொடுத்த ஒரே தலைவி நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதில் மத்திய அரசின் பங்கைக்கூட நாங்கள் எதிர்பார்ப்பது கிடையாது. மீனவ மகளிரிடமிருந்து ஒரு பங்கும், மாநில அரசின் 2 பங்கும் சேர்த்து ஆக மொத்தம் ரூ.4,500/-ஐக் கொடுக்கின்ற ஒரே அரசு நம்முடைய அம்மாவினுடைய அரசு; இது ஒன்று. இரண்டாவதாக, தேசிய மீனவர் சேமிப்பு நிவாரணத் திட்டத்தின்மூலம் ரூ.4,500/- வழங்கப்படுகிறது. இப்படி ஒட்டுமொத்தமாக கணக்கீடு செய்தால் ஒவ்வோர் ஆண்டும் மீனவர்கள் குடும்பத்திற்கு நேரடியாக 19 ஆயிரம் ரூபாய் வழங்குகின்ற ஒரே அரசு நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசுதான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் என்ன சொல்கிறேன் என்றால், மீன் விற்பனை செய்கின்ற மகளிராக இருக்கட்டும், அதேபோல் ஆண்களாக இருக்கட்டும் அவர்கள் ஒன்றுகூடி மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் பதிவு செய்துகொண்டால் நிச்சயமாக அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. சண்முகநாதன் அவர்கள்.*

முற்பகல் 10-35

திரு. எஸ்.பி. சண்முகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் தொகுதியைச் சேர்ந்த பெரியதாழை கிராமத்தில் சுமார் 15,000*

மக்களுக்குமேல் வசித்து வருகின்றார்கள். 1,000 படகுகளுக்குமேல் வைத்துக்கொண்டு மீன்பிடித் தொழில் செய்து வருகின்றார்கள். இப்போது கடல் அரிப்பால், அந்தக் கிராமமே அழிந்து போகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. அந்தக் கிராமத்தில் இருக்கின்ற மக்கள் பயந்துகொண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அந்த அளவிற்கு அந்தக் கிராமத்தில் கடல்நீர் புகுந்து, அந்தக் கிராமமே அழிகின்ற ஒரு சூழ்நிலையில் இருப்பதால், அதனைச் சீரமைக்க வேண்டுமென்று, அந்தப் பகுதியினுடைய மக்கள் அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அதற்கென்று ஒரு estimate-ம் தயார் செய்யப்பட்டு, அது அரசிடம் வந்திருக்கின்றது. மீனவ மக்களின் நலன் கருதியும், பெரியதாழை மீனவக் கிராமம் அழியாமல் இருப்பதற்கும், அந்தக் கிராமத்தை விட்டு மீனவ மக்கள் வெளியேறும் சூழ்நிலை ஏற்படாமல் இருக்கவும், உடனடியாக அம்மாவின் அரசும் மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களும், அம்மாவின் அரசை சிறப்பாக வழி நடத்திச் செல்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி பழனிசாமி அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும், நடவடிக்கை எடுத்து, அந்த மீனவக் கிராமத்தை காப்பாற்றித்தர வேண்டுமென்று, நான், தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாத்தான்குளம் தாலுகாவிலுள்ள பெரியதாழை மீனவக் கிராமத்தில் 1,122 மீனவக் குடும்பங்கள் உள்ளன. இந்த மீனவக் கிராமத்தில் 385 கண்ணாடி நார் இழைப் படகுகள் மீன் பிடிப்பில் ஈடுபட்டிருக்கின்றன. 2017-ல் இந்தக் கிராமத்தில் பொதுப் பணித் துறை மூலமாக 800 மீட்டர் நீளம் கொண்ட G1 மற்றும் 200 மீட்டர் நீளம் கொண்ட G2 தூண்டில் பாலம் கட்டப்பட்டது. ஆனால், கடல் அரிப்பின் காரணமாக, கடல் நீரானது பெரியதாழை மீனவக் கிராமத்திற்குள் தொடர்ந்து புகுந்து வருகின்ற நிலையில், ஏற்கெனவே கட்டப்பட்ட மீன்பிடி இறங்குதளக் கட்டடங்கள் முற்றிலும் கடல் நீரில் மூழ்கிவிட்டன. எனவே, அரசு இந்த நிலையை முற்றிலுமாக உணர்ந்ததன் அடிப்படையில், தூத்துக்குடி மீன்பிடி துறைமுகத் திட்ட கோட்ட

2019 பிப்ரவரி 11]

செயற்பொறியாளர் அவர்களால் இந்தத் தூண்டில் பாலத்தினை நீட்டிப்பதற்கு ரூபாய் 26 கோடியே 75 இலட்சம் மற்றும் இறங்கு தள வசதிகளுக்காக ரூபாய் 28 கோடியே 50 இலட்சம் செலவில் மொத்தம் ரூபாய் 55 கோடியே 25 இலட்சத்தில் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது. எனவே, மீனவர்களின் கஷ்டத்தை உணர்ந்து, நிச்சயமாக அரசு நல்ல முடிவை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

45—

மகளிர் கலைக் கல்லூரி

***6393—திரு. க.நா. விஜயகுமார்**:

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வடக்குப் பகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வாய்ப்பு தருகிறேன், இருங்கள். வாய்ப்பு தந்து கொண்டுதான் இருக்கிறேன்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் வடக்குப் பகுதியில் மகளிர் கலைக் கல்லூரி துவங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. க.நா. விஜயகுமார் அவர்கள்.*